சஞ்சய் ராமசாமி அவர்கள் சொல்ல வந்தது என்னவென்றால், ஏ.டி.எம்.கே. பார்ட்டி இன்ஸ்டிகேட் பண்ணிதான் நாங்கள் எல்லாம் இப்படிச் செய்கிறோம் என்பது முற்றிலும் தவறானது. மகாத்மா காந்தி பிரச்சினை வரப் போகிறது என்று அவர்கள் என்ன சொப்பனம் கண்டார்களா? அல்லது மாயா ஜாலக் கண்ணாடி வைத்துக் கொண்டிருக்கிறார்களா? அது முற்றிலும் தவறு என்று குறிப்பிட்டு விட்டு அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 10-45

(ஆ) 29.3.95 ஆம் நாளன்று அவையில் உறுப்பினர் திரு. ச. அழகிரி பேசியதைத் திரித்துப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செல்வராஜ்.*

திரு. கே. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சில பத்திரிகைகளில் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசியதைத் திரித்து தவறாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர் அவையில் என்ன பேசினார் என்பதை நீங்களும் பத்திரிகையில் வெளியிட்டால் அது மக்கள் மத்தியில் உண்மை என்ன என்பதைத் தெளிவாக்கும். அதனால் அதை நீங்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் நேற்றே இங்கே வாசித்துக் காண்பித்திருக்கிறேன். அவர் பேசிய பேச்சை அப்படியே சுருக்கெழுத்தாளர்கள் எடுத்துக் கொடுத்து (குறுக்கீடு) இல்லை, அது பத்திரிகையாளர்கள் தர்மம். பல பத்திரிகையாளர்கள் பெரும் தர்மங்களையெல்லாம் கடைப்பிடிக்கிறார்கள்.*

7. கவன ஈர்ப்பு

(அ) சேலம் செவ்வாய்ப்பேட்டை 'லீ' பஜாரில் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் மு. நடேசன், இரா. தாமரைக்கனி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம்

வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், செவ்வாய்ப்பேட்டை 'லீ' பஜாரில் 21-3-1995 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள் சேதமுற்றது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

21-3-1995 அன்று சேலம் செவ்வாய்ப்பேட்டை 'லீ' பஜாரில் (Leigh bazaar) தீ விபத்து ஏற்பட்டு, சுமார் ரூ. 1.54 கோடி மதிப்புள்ள பொருள்கள் சேதம் அடைந்துள்ளன. இந்த அங்காடிகள் 1919-ஆம் ஆண்டில் 7.75 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டு இப்போது 20.75 ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகின்றன. இதில் மொத்தம் 192 கடைகள் உள்ளன. கீழ்க்கண்ட சேதங்கள் ஏற்பட்டுள்ளன:

தீயினால் முழுமையாக பாதிக்கப்பட்ட கடைகள்	..	23
பகுதியாக பாதிக்கப்பட்ட கடைகள்	..	–
மாருதி கார்	..	1
இரு சக்கர வாகனங்கள்	..	6
மொத்த இழப்பீடு	..	ரூ. 1.54 கோடி

2. இந்தத் தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை. இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்து காவல்துறையின் விசாரணையில் உள்ளது. இந்த விபத்தில் உயிர்ச் சேதங்கள் ஏதும் இல்லை. 21-3-1995 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி இடத்தை நேரில் பார்வையிட்டுள்ளார். இந்தக் கடைகள் இன்சூரன்ஸ் செய்யப்படவில்லை. இன்சூரன்ஸ் செய்திருந்தால் அதற்கான இழப்பீட்டுத் தொகை கடை உரிமையாளர்களுக்குக் கிடைத்திருக்க வாய்ப்புள்ளது. இத்தகைய நேர்வுகளில் பண உதவி செய்ய அரசு விதிமுறைகளில் வழிவகையில்லை.

[1995 மார்ச் 31

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் புரட்சி எதிலும் புரட்சி, வருங்கால இந்திய மக்களின் விடிவெள்ளி தமிழகத்தின் தலைமகள், தங்க நிகர் ஏழைகளின் குடும்பத் தலைவி, நன்செயல் ஒன்றே குறிக்கோள் என ஆட்சி நடத்துகிற எங்கள் தாயே, எழை எளியவர்களுடைய துயர் துடைக்கின்ற எங்கள் அன்னையே, டாக்டர் புரட்சித் தலைவியே, என்னுடைய தொகுதியில் இந்தத் தீ விபத்தானது, மிகக் கோரச் சம்பவமாக நடந்திருக்கிறது. இந்தத். தீ விபத்திலே சேலம் லீ பஜாரில் 21-3-1995 அன்று நண்பகல் 1 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. ஏறக்குறைய 2 கோடி அளவில் சேதம் அடைந்து உள்ளது. 23 கடைகள் 23 மணி நேரம் எரிந்து சாம்பல் ஆகி உள்ளன. இந்தியாவிலே உள்ள மிகப் பெரிய வணிக வளாகம் இது. வணிகர்களும், சிறு சிறு விவசாயிகளும், பொது மக்களும் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர். வணிகர்கள், சிறு வியாபாரிகளாக இருப்பவர்கள், மஞ்சள், பருத்தி, புளி, கொத்துமல்லி, இரும்பு, கம்பு, சோளம், அரிசி போன்ற பொருள்களையும் மற்றும் உள்ள பொருள்களையும், தங்கள் மண்டியிலே இறக்கி அன்று மாலைக்குள் ஏலம் விடப்பட்டு, சிறு வியாபாரிகள், விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கிற முறை இருக்கிறது. அதிலே கமிஷனாகத்தான், அங்கே மண்டி வைத்திருப்பவர்களுக்கு வருமானமாக வருகிறது. அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை, சந்தை நாள் என்பதனால், சிறு விவசாயிகள் தங்களுடைய பொருளான மஞ்சள், பருத்தி மற்றும் உள்ள பொருள்கள் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை அன்றைக்குக் காலையிலேயே கொண்டு வந்து இறக்கி வைத்துள்ளனர். பகலிலே தீப் பிடித்து அவர்களுடைய பொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகிவிட்டன. அதிலே நூற்றுக்கணக்கான சிறு சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அது மட்டும் அல்லாமல் அங்கிருந்த மாருதிகார் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள், மண்டிக் கட்டடங்கள் ஆகிய அனைத்தும் எரிந்து நாசமாகி உள்ளன. ஏழை மக்களின் இன்னலைத் தீர்க்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியிலே, கருணை உள்ளம் கொண்டு இந்த ஏழை விவசாயிகளுக்கும், சிறு வணிகர்களுக்கும், தங்களுடைய முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி கிடைக்குமா என்று கேட்கிறார்.

1995 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற அரசினுடைய விதிமுறைகளின்படி தற்போது குடிசைகள் எரிந்து போனால், குடிசைகளுக்கு 500 ரூபாயும், பாதிக்கப்பட்டிருந்தால் 250 ரூபாயும், 5 கிலோ அரிசி, ஒரு சேலை, ஒரு வேட்டி, மண்ணெண்ணெய் போன்றவையெல்லாம் கொடுப்பதாக இருக்கிறது. இதுவரையில் ரூபாய் 500 என்று இருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சென்னையைப் பொறுத்த வரைக்கும் 600 ரூபாயும், சென்னை அல்லாத இடங்களில் 500 ரூபாயும் ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற அரசு உத்தரவின்படி இவ்வளவுதான் இன்றைக்குக் கொடுக்கப்படும். இதுபோல வணிகர்கள் கடைகளில் தீ விபத்து ஏற்பட்டால், அரசு அதற்காக அங்கேயிருக்கிற வங்கிகளின் மூலமாகக் கடன் கிடைப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, அது அவருடைய தொகுதியிலே இருப்பது, அவரே கேட்கட்டும்.

திரு. மு. நடேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பாதிக்கப்பட்டவர்கள் வியாபாரிகள் மட்டும் அல்லர். அங்கே பாதிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கான சிறு சிறு விவசாயிகள். தர்மபுரி மர்வட்டத்திலிருந்தும், சேலம் மாவட்டத்திலிருந்தும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து அந்த விவசாயப் பொருள்களைக் கொண்டு வந்து அங்கே இறக்கி அவர்கள் பணம் பெற்றுக் கொண்டு செல்கின்ற சூழ்நிலை. ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த விவசாயிகளுக்காகவும் அந்தச் சிறு வியாபாரிகளுக்காகவும் வட்டியில்லாத கடனையாவது வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற விதிப்படி இவை எல்லாம் கொடுப்பதற்கு இயலாது. அங்கேயிருக்கின்ற கடைக்காரர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி அவர்களுக்கு வங்கி மூலமாக வேண்டுமென்றால் உதவி செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.